## பழனி கோயில் நில முறைகேடு!

# கைதான வழக்குரைஞர் மதுரை சிறையில் மரணம்!

**மதுரை, ஆக.12-**

**பழனி கோயில் நிலத்தை முறைகேடாக பத்திரப் பதிவு செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட வழக்குரைஞர் அன்வர்தீன் மதுரை மத்திய சிறையில் திடீரென சனிக்கிழமை மரணமடைந்தார். இதையடுத்து சிறைக் காவலர்கள், உடல் கூறாய்வு செய்த மருத்துவர்களிடம் மதுரை மாவட்ட விரைவு நீதிமன்ற நீதிபதி ராஜபிரபு விசாரணை நடத்தினார்.**

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் தண்டாயுதபாணி சுவாமி கோயில் கட்டுப்பாட்டில் உள்ள தண்டபாணி சுவாமிகள் அறக்கட்டளைக்குச் சொந்தமான 1.40 ஏக்கர் நிலத்தை முறைகேடாக தனி நபர்களுக்கு பத்திரப் பதிவு செய்ததாகத் தொடுக்கப்பட்ட வழக்கில், சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், நிலத்தை விற்பனை செய்த த.முருகதாஸ், அந்த நிலத்தை வாங்கிய கா.வெள்ளைத்துரை, து.சேதுபதி உள்பட 11 பேர் மீது சி.பி.சி.ஐ.டி. போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

இவர்களில் விழுப்புரத்தைச் சேர்ந்த முருகதாஸ் வெள்ளைத்துரை (60), சேதுபதி (67), இவர்களுக்கு உதவிய பழனி கவுண்டன்குளம் பகுதியைச் சேர்ந்த வழக்குரைஞர் அஸ்வர்தீன் (65) ஆகிய 4 பேரையும் காவலில் எடுத்து சி.பி.சி.ஐ.டி. போலீஸார் கடந்த 3 நாள்களாக தீவிர விசாரணை மேற்கொண்டனர். இதையடுத்து. இவர்கள் மதுரை த்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், வழக்குரைஞர் அன்வர்தீனுக்கு வெள்ளிக்கிழமை இரவு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, சிறை வளாகத்தில் உள்ள மருத்துவமனையில் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. சனிக்கிழமை அதிகாலை மீண்டும் அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டதால், அவசர ஊர்தி மூலம் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தனர். இதையடுத்து, அவரது உடல் கூறாய்வுக்காக பிணவறைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதுகுறித்து விசாரணை நடத்துவதற்காக, மதுரை மாவட்ட விரைவு நீதிமன்ற நீதிபதி ராஜபிரபு சனிக்கிழமை காலை 11 மணியளவில் அரசு மருத்துவமனையின் பிணவறைக்கு வந்தார். அங்கு அன்வர்தீனின் உடலில் ஏதேனும் காயங்கள் உள்ளனவா. அவர் இறப்புக்கான காரணம் என்ன என்பது குறித்து விசாரணை நடத்தினார். பின்னர், நீதிபதி ராஜபிரபு. மதுரை மத்திய சிறையிலும் விசாரணை நடத்தினார். அப்போது அன்வர்தீன் அடைக்கப்பட்டிருந்த அறை, அவருக்கு வழங்கப்பட்ட முதலுதவி சிகிச்சை குறித்தும் கேட்டறிந்தார்.

இதுகுறித்து அரசு ராஜாஜி மருத்துவமனையின் உறைவிட மருத்துவ அலுவலர் சரவணன் கூறியதாவது:-

பொதுவாக விசரணையில் இருக்கும் சிறைவாசி உயிரிழந்தால் உடல் கூறாய்வு பரிசோதனைப் பணிகளை பிற மாவட்டங்களைச் சேர்ந்த அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் மேற்பார்வையில் செய்ய வேண்டும் என்ற உயர் நீதிமன்ற உத்தரவு உள்ளது.

இதன்படி, அன்வர்தீன் உடல் மதுரை, விருதுநகர், திண்டுக்கல் அரசு மருத்துவமனைகளின் சட்டம் சார்ந்த தடயவியல் மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் மேற்பார்வையில் கூறாய்வு செய்யப்பட்டது. மேலும், இந்தக் கூறாய்வு முழுவதும் வீடியோவாகப் பதிவு செய்யப்பட்டது.

முன்னதாக, அன்வர்தீன் முழு உடல் சி.டி. ஸ்கேன் பரிசோதனையும் செய்யப்பட்டது. மருத்துவமனைக்கு வரும் வழியில் அவர் இறந்ததால், உடல் உள் உறுப்புகள் ரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்படவுள்ளன. மேலும் கூறாய்வு குறித்த ஆய்வறிக்கை வந்தவுடன் இறப்புக்கான உண்மையான காரணம் தெரியவரும். கூறாய்வுக்குப் பிறகு அன்வர்தீன் உடல் அவரது உறவினர்களிடம் சனிக்கிழமை மாலை ஒப்படைக்கப்பட்டது என்றார் அவர்.

---

இதுவரை ரூ.6 கோடியே 53 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 53 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 10-08-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | ஜி. அண்ணாசாமி, மாத்தூர் மேற்கு, தஞ்சை மாவட்டம் | – 25,000/– |
| 2. | எம்.பி.மாணிக்கம், வி.புதுப்பாக்கம், வானூர், விழுப்புரம் மாவட்டம். | – 25,000/– |
| 3. | ரா.முத்துசாமி, கரியப்பா நகர், கள்ளக்குறிச்சி மாவட்டம். | – 25,000/– |
| 4. | ஜி. ராமலிங்கம், கிளைச் செயலாளர், கோதண்டவிளாகம், நங்குடி, கடலூர் | – 25,000/– |
| 5. | வி. சீதாபதி, மேல வாழக்கரை கிராமம், திருக்குவளை, நாகை மாவட்டம். | – 25,000/– |
| 6. | மு.திருசங்கு, வடக்கு தெரு, செம்பதனிருப்பு, சீர்காழி, மயிலாடுதுறை | – 25,000/– |
| 7. | என். பாலகிருஷ்ணன், காட்டுக்காரத் தெரு, திருவாரூர் – 610 001. | – 25,000/– |
| 8. | டே.லீமாரோஸ்லின், எறையூர் கிராமம், வேப்பந்தட்டை, பெரம்பலூர் மாவட்டம் | – 25,000/– |
| | மொத்தம் | ரூ.2,00,000/- |

---

## 12 ஆண்டுகளில்

# ஒன்றிய பா.ஜ.க அரசு ஏற்படுத்திய வேலைவாய்ப்புகள் என்ன?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

*புதுடெல்லி, ஆக.12-*

*2014ஆம் ஆண்டிலிருந்து ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகளின் விவரங்கள் என்ன? என்றும் வேலை வாய்ப்பு உருவாக்கத்தில் ஆண்டு வாரியான இலக்குகள், எட்டப்பட்ட சாதனைகள் மற்றும் பற்றாக்குறை ஏதேனும் இருப்பின் அதற்கான காரணங்கள் என்ன என்றும் ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.*

*அதன் விவரங்கள் வருமாறு:*



*அரசின் முக்கிய வேலை வாய்ப்பு திட்டங்களின் கீழ் 2014ஆம் ஆண்டு முதல் உருவாக்கப்பட்ட உண்மையான வேலைவாய்ப்புகள் குறித்து அரசு ஏதேனும் விரிவான ஆய்வை நடத்தியுள்ளதா? அவ்வாறெனில், அத்திட்டங்கள் மற்றும் ஆண்டு வாரியாக அதன் விவரங்கள் என்ன?*

*2014ஆம் ஆண்டிலிருந்து சரிபார்க்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட நிகர வேலைவாய்ப்புகளின் விவரங்கள் என்ன? அவற்றில் நிரந்தர வேலைவாய்ப்பு, ஒப்பந்த அடிப்படையிலான வேலைவாய்ப்பு, தற்காலிக வேலைவாய்ப்பு, சுயதொழில் மற்றும் (Gig/ platformbased) அடிப்படையிலான வேலைவாய்ப்புகளுக்கு இடையிலான வேறுபாடுகளை குறிப்பிடுவதுடன், அத்தகைய வேலைவாய்ப்புகள் உண்மையானவை, தொடர்ந்து நீடிப்பவை மற்றும் இரட்டிப்புப் பதிவு இல்லாதவை என்பதை உறுதி செய்ய அரசு பின்பற்றிய வழிமுறைகள் என்ன?*

*வேலைவாய்ப்பு உருவாக்கம் தொடர்பான வாக்குறுதிகளுக்கும், 2014ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட உண்மையான வேலைவாய்ப்பு முடிவுகளுக்கும் இடையிலான இடைவெளியை அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வாறெனில், ஆண்டு வாரியான இலக்குகள், எட்டப்பட்ட சாதனைகள் மற்றும் பற்றாக்குறை ஏதேனும் இருப்பின் அதற்கான காரணங்கள் உள்ளிட்ட விவரங்கள் என்ன?*

*2014ஆம் ஆண்டு முதல், ஆண்டு வாரியாக பணிக்கு முதன்முறையாக நுழைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை; EPFO, ESIC (Employees' State Insurance Corporation) தேசிய ஓய்வூதியத் திட்ட (NPS) சந்தாதாரர்களின் மொத்த எண்ணிக்கை; ஏற்கனவே உள்ள தொழிலாளர்களின் பணிமுறைப்படுத்தலாக (formalisation) இல்லாமல், உண்மையான புதிய வேலைவாய்ப்புகளைக் குறிப்பதாகத் தனித்தனியாகச் சரிபார்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரங்கள் என்ன?*

*இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.*

---

## SIR - வாக்காளர் பட்டியலிலிருந்து

# சிறுபான்மையினர் எவ்வளவு பேர் நீக்கப்பட்டுள்ளனர்?

## மாநிலங்களவையில் கவிஞர் சல்மா கேள்வி!

*புதுடெல்லி, ஆக. 12-*

*"SIR வாக்காளர் பட்டியலிலிருந்து சிறுபான்மையினர் எவ்வளவு பேர் நீக்கப்பட்டுள்ளனர்? என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கவிஞர் சல்மா கேள்வி எழுப்பினார்.*

*இதுகுறித்து அவர் மாநிலங்களவையில் எழுப்பிய கேள்வி வருமாறு:-*

*a) தேர்தல் வாக்காளர் பட்டியலின் Special Intensive Revision - SIR குறித்து*

*United Nations Special Rapporteur தெரிவித்துள்ள கவைலகைள அரசு கவனத்தில் எடுத்துள்ளதா;*

*b) குறிப்பாக சிறுபான்மை சமூகங்கைளச் சேர்ந்த வாக்காளர்களின்*

*பெயர்கள் அதிக அளவில் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு களை அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வாறு ஆய்வு செய்திருந்தால்,*

*அதன் விவரங்கள் யாவை;*

*c) 2025ஆம் ஆண்டு SIR தொடங்கப்பட்டதிலிருந்து, மாநில வாரியாகவும், சமூக வாரியாகவும் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை எவ்வளவு; மற்றும்*

*d) மேற்கண்ட பெயர் நீக்கங்களுக்கு எதிராக மாநில வாரியாகவும், சமூக வாரியாகவும் பெறப்பட்ட ஆட்சேபனைகள் (Objections) எத்தனை?*

*அவற்றின் விவரங்கள் யாவை.*

*இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.*

*இதற்கு அமைச்சர் ஸ்ரீ அர்ஜுன்ராம் மேக்வால் அளித்த பதில் வருமாறு:-*

*ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் (United Nations Special Rapporteur), இந்தியத் தேர்தல் ஆணையத்தால் (ECI) மேற்கொள்ளப்படும் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision - SIR) என்ற நடைமுறையின் மூலம், குறிப்பாக மேற்கு வங்காளத்தில், வாக்காளர் பட்டியல் களில் இருந்து பெருமளவில் பெயர்கள் நீக்கப்படுவது குறித்து கவலை தெரிவித்திருப்பது கவனத்திற்கு வந்துள்ளது.*

*கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட வேகமான நகரமயமாக்கல், கல்வி அல்லது வேலைவாய்ப்புக்காக மக்கள் இடம்பெயர்தல் மற்றும் பிற சமூக பொருளாதார மாற்றங்கள் காரணமாக, மக்கள் அடிக்கடி தங்களது வசிப்பிடங்களை மாற்றும் நிலை ஏற்பட்டுள்ளது.*



*இதன் காரணமாக, பல வாக்காளர்கள் புதிய தொகுதியில் பதிவு செய்திருந்தாலும், அவர்களின் பெயர்கள் முந்தைய வாக்காளர் பட்டியல்களிலும் தொடர்ந்து இடம் பெறுகின்றன. இதனால் நகல் பதிவுகள் அல்லது தவறான பதிவுகள் ஏற்படுகின்றன.*

*இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, எந்தவொரு குழுவை யோ அல்லது சமூகத்தையோ பாரபட்சமாக நடத்தாமல், சட்டத்தின்படி உரிய நடைமுறைகளைப் பின்பற்றி SIR மேற்கொள்ளப்படுகிறது.*

*மேலும், SIR நடைமுறையின் ஒவ்வொரு கட்டத்திலும் உள்தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் (Internal Quality Checks) மேற்கொள்ளப் படுவதாக இந்தியத் தேர்தல் ஆணையம் அவ்வப்போது தெளிவு படுத்தியுள்ளது.*

*மேலும், வாக்காளர் பட்டியல் இறுதி செய்யப்பட்ட பிறகும் மேல்முறையீடு செய்யும் வாய்ப்பு உள்ளது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950இன் பிரிவு 24இன் படி, முதலில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் (District Magistrate) மேல்முறையீடு செய்யலாம். அதன்பின்னர், சம்பந்தப்பட்ட தலைமைத் தேர்தல் அலுவலரிடம் (Chief Electoral Officer) மேல்முறையீடு செய்யலாம் என அமைச்சர் பதிலளித்தார்.*

---

## 'ஒன்றிய அரசு' என உச்சரிக்கவே பயப்படுகிற அரசு இது!

# தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாட தனிச் சட்டம் கொண்டுவர வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

*சென்னை, ஆக.12-*

*தமிழ்த்தாய் வாழ்த்து தீர்மானம் தொடர்பாக கழக முன்னாள் அமைச்சர் எஸ். ரகுபதி பேட்டி அளித்தார். அவரது பேட்டியில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாட தனி சட்டம் கொண்டுவர வேண்டும் என்றும், இந்த தீர்மானம் ஆளுநரைக் கட்டுப்படுத்துமா? என்றும், ஒன்றிய அரசு என உச்சரிக்கவே பயப்படுகிற இந்த அரசு சட்டம் கொண்டு வருமா? என்றும் கேள்வி கேட்டுள்ளார்.*

*இது குறித்து முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்த பேட்டி வருமாறு:-*

*தமிழ்நாடு அரசு இன்று தமிழ்த்தாய் வாழ்த்தினை முதலில் பாட வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறது. கடந்த திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து நிகழ்ச்சிகளிலும் முதலில் தமிழ்த் தாய் வாழ்த்து பாட வேண்டும்.*

*அதை சொந்த குரலிலே பாட வேண்டும் என்கின்ற உத்தரவு மூலம் அமல்படுத்தப்பட்டது. ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டின் ஆளுநர் அர்லேகர் அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்தை*



*மூன்றாவது இடத்திற்கு தள்ளிவிட்டார். திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலே தமிழ்த்தாய் வாழ்த்து முதலிலே பாடப்பட வேண்டும் என்பதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டு எல்லா நிகழ்ச்சிகளிலேயும் அது அமல்படுத்தப்பட்டது.*

*எனவே இன்றைக்கு கொண்டு வந்திருக்கிற அந்த தீர்மானம் என்பது நிச்சயமாக ஆளுநரையோ மற்றவர்களையோ கட்டுப்படுத்துமா என்பது சந்தேகம்.*

**சட்டப்பூர்வமான அங்கீகாரம் வேண்டும்!**

*எனவே தி.மு.க.வை பொறுத்தவரையில் ஒரு மசோதா கொண்டுவந்து அதன் மூலமாக இதற்கு சட்டபூர்வமான அங்கீகாரம் அளிக்க வேண்டும்.*

*தமிழ்நாட்டிலே தமிழ்த் தாய் வாழ்த்து முதலிலே பாடப்பட வேண்டும் என்கின்ற சட்டபூர்வ அங்கீகாரத்தை அரசு பெற்று தந்தால் தான் அது நிலைத்து நிற்க முடியும். ஆனால் சட்டபூர்வ அங்கீகாரத்தை அளிப்பதற்கு இந்த அரசு எந்த நடவடிக்கையும் எடுப்பதாக தெரியவில்லை. ஒன்றிய அரசு என்று சொல்லவே அவர்கள் பயப்படுகிறார்கள். எனவே ஒன்றிய அரசு என்று உச்சரிக்கவே பயப்படுகிற இந்த அரசு சட்டம் கொண்டு வருமா என்பது சந்தேகம். கொண்டுவர வேண்டும் என்பது எங்களுடைய விருப்பம். கொண்டுவர வேண்டும். கொண்டுவந்தால் தான் அது நிலைத்து நிற்கும்.*

*இவ்வாறு முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.*



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளில் ஆண்டிமடம் ஒன்றிய கழகத்தின் சார்பில், ஒன்றிய கழக பொறுப்பாளர் ஆர். கலியபெருமாள் தலைமையில் தளபதி அன்பகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழுவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் ஆர்.செந்தில்குமார் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.